# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2015.04.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்)

**(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

மக்கள் ஒழுங்கு மற்றும் கிறிஸ்தவ மத விவகாரம் பற்றிய அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *3.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகமானது (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 35அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு விதித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு கடவுச்சீட்டில் உட்புகுத்தப்படுவதற்கு கடவுச்சீட்டொன்றுக்காக அல்லது கடவுச்சீட்டொன்றை புதுப்பிப்பதற்காக விண்ணப்பகாரரிடமிருந்து விரல் அடையாளத்தை எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.*

ச.வ.ஓ. 25/2013

## (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்           ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*351 ஆம் அத்தியாயத்தில் 35அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டம், அதன் 35 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"கடவுச்சீட்டு நோக்கங்களுக்காக விரல் அடையாளத்தை எடுத்தல்.

35அ. கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட அதிகாரி, கடவுச்சீட்டொன்றுக்காக அல்லது கடவுச்சீட்டொன்றை புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கின்ற ஆளொருவரிடமிருந்து கடவுச்சீட்டொன்றில் சேர்க்கப்படுவதற்காக விரல் அடையாளம் எடுக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 008991 -450 (2015/04)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்